# Chapter

# நிலப்பரப்பும், பெருங்கடல்களும்

---

## I. புத்தக வினாக்கள்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

**Question 1.**
மிகச் சிறிய பெருங்கடல்
அ) பசிபிக் பெருங்கடல்
ஆ) இந்தியப் பெருங்கடல்
இ) அட்லாண்டிக் பெருங்கடல்
ஈ) ஆர்க்டிக் பெருங்கடல்

**விடை:**
ஈ) ஆர்க்டிக் பெருங்கடல்

**Question 2.**
மலாக்கா நீர்ச்சந்தியை இணைப்பது
அ) பசிபிக்பெருங்கடல் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல்
ஆ) பசிபிக்பெருங்கடல் மற்றும் தென் பெருங்கடல்
இ) பசிபிக்பெருங்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல்
ஈ) பசிபிக்பெருங்கடல் மற்றும் ஆர்க்டிக் பெருங்கடல்

**விடை:**
இ) பசிபிக்பெருங்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல்

**Question 3.**
அதிகமான கப்பல் போக்குவரத்து நடைபெறும் பெருங்கடல்
அ) பசிபிக் பெருங்கடல்
ஆ) அட்லாண்டிக் பெருங்கடல்
இ) இந்தியப் பெருங்கடல்
ஈ) ஆர்க்டிக்பெருங்கடல்

**விடை:**
ஆ) அட்லாண்டிக் பெருங்கடல்

**Question 4.**
உறைந்த கண்டம்
அ) வட அமெரிக்கா
ஆ) ஆஸ்திரேலியா
இ) அண்டார்டிகா
ஈ) ஆசியா

**விடை:**
இ) அண்டார்டிகா

**ஆ. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

**Question 1.**
உலகின் மிகப் பெரிய கண்டம் ____

**விடை:**
ஆசியா

**Question 2.**
இந்தியாவில் கனிம வளம் நிறைந்த பீடபூமி ______

**விடை:**
சோட்டா நாகபுரி

**Question 3.**
பெருங்கடல்களில் மிகப்பெரியது ______

**விடை:**
பசிபிக் பெருங்கடல்

**Question 4.**
டெல்டா _____ நிலை நிலத்தோற்றம்

**விடை:**
மூன்றாம் நிலை

**Question 5.**
தீவுக் கண்டம் என அழைக்கப்படுவது _____

**விடை:**
ஆஸ்திரேலியா

## இ. பொருந்தாததை வட்டமிடுக.

**Question 1.**
ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, (இலங்கை)

**விடை:**

ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, **இலங்கை**

**Question 2.**
ஆர்க்டிக்பெருங்கடல், மத்திய தரைக்கடல், இந்தியப் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல்

**விடை:**

ஆர்க்டிக்பெருங்கடல், **மத்திய தரைக்கடல்**, இந்தியப் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல்

**Question 3.**
பீடபூமி, பள்ளத்தாக்கு, சமவெளி, மலை

**விடை:**

பீடபூமி, **பள்ளத்தாக்கு**, சமவெளி, மலை

**Question 4.**
வங்காள விரிகுடா , பேரிங் கடல், சீனாக் கடல், தாஸ்மானியா கடல்

**விடை:**

**வங்காள விரிகுடா**, பேரிங் கடல், சீனாக் கடல், தாஸ்மானியா கடல்

**Question 5.**
ஆண்டிஸ், ராக்கி, எவரெஸ்ட், இமயமலை

**விடை:**

ஆண்டிஸ், ராக்கி, எவரெஸ்ட், இமயமலை

**ஈ. பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| 1. தென்சான்ட்விச் அகழி | அ) அட்லாண்டிக் பெருங்கடல் | விடை: | ஆ |
| 2. மில்வாக்கி அகழி | ஆ) தென் பெருங்கடல் | | அ |
| 3. மரியானா அகழி | இ) இந்தியப்பெருங்கடல் | | ஈ |
| 4. யுரேஷியன் படுகை | ஈ) பசிபிக் பெருங்கடல் | | உ |
| 5. ஜாவா அகழி | உ) ஆர்க்டிக் பெருங்கடல் | | இ |

**உ. (i) கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்க.**

1. சமவெளிகள் ஆறுகளால் தோற்றுவிக்கப்படுகின்றன.
2. இந்தியப் பெருங்கடலின் ஆழமான பகுதி சான்ட்விச் அகழி.
3. பீடபூமிகள் வன்சரிவைக் கொண்டிருக்கும்.

மேற்கூறிய கூற்றுகளில் சரியானவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்திக் கண்டறிக.
அ) 1 மற்றும் 3
ஆ) 2 மற்றும் 3
இ) 1, 2, மற்றும் 3
ஈ) 2 மட்டும்
**விடை:**
அ) 1 மற்றும் 3

**உ. ii. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்க.**

கூற்று 1: மலைகள் இரண்டாம் நிலை நிலத்தோற்றங்கள் ஆகும்.
கூற்று 2: மிகவும் ஆழமான அகழி மரியானா அகழி
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு.
ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
இ) இரண்டு கூற்றுகளும் சரி.
ஈ) இரண்டு கூற்றுகளும் தவறு.
**விடை:**
இ) இரண்டு கூற்றுகளும் சரி

**ஊ. ஒரு வார்த்தையில் விடையளி.**

**Question 1.**
உலகின் உயரமான பீடபூமி எது?

**விடை:**
திபெத்.

**Question 2.**
இரண்டாம் நிலை நிலத்தோற்றம் எவை?

**விடை:**
மலைகள், பீடபூமிகள், சமவெளிகள்.

**Question 3.**
ஒரு நாட்டின் பெயரைக் கொண்டுள்ள பெருங்கடல் எது?

**விடை:**
இந்தியப் பெருங்கடல்.

**Question 4.**
அரபிக் கடலில் உள்ள தீவுகள் யாவை?

**விடை:**
மாலத்தீவு, மினிகாய் தீவு.

**Question 5.**
கடலிலுள்ள ஆழமான பகுதி யாது?

**விடை:**
அகழி

**ஏ. சுருக்கமான விடையளி:**

**Question 1.**
கண்டம் என்றால் என்ன?

**விடை:**

- மிகப்பெரும் நிலப்பரப்பினை கண்டங்கள் என அழைக்கிறோம்

- உலகில் ஏழு கண்டங்கள் உள்ளன.
- எடுத்துக்காட்டு: ஆசியா, ஐரோப்பா

**Question 2.**
அட்லாண்டிக் பெருங்கடலின் எல்லைகளாக உள்ள கண்டங்கள் யாவை?

**விடை:**
அட்லாண்டிக் பெருங்கடலின் கிழக்கே ஐரோப்பாவும், ஆப்பிரிக்காவும் மேற்கே வட அமெரிக்காவும், தென் அமெரிக்காவும் எல்லைகளாக உள்ளன.

**Question 3.**
பெருங்கடல் என்றால் என்ன?

**விடை:**

- மிகப்பரந்த நீர்ப்பரப்பினை பெருங்கடல்கள் என அழைக்கிறோம்
- புவியில் ஐந்து பெருங்கடல்கள் காணப்படுகின்றன. அவை, பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், தென்பெருங்கடல் மற்றும் ஆர்க்டிக் பெருங்கடல் ஆகும்.

**Question 4.**
பரப்பளவின் அடிப்படையில் கண்டங்களின் பெயர்களை வரிசைப்படுத்தி எழுது?

**விடை:**

1. ஆசியா
2. ஆப்பிரிக்கா
3. வட அமெரிக்கா
4. தென் அமெரிக்கா
5. அண்டார்டிகா
6. ஐரோப்பா
7. ஆஸ்திரேலியா.

**Question 5.**
வட, தென் அமெரிக்காவைச் சூழ்ந்துள்ள பெருங்கடல்கள் எவை?

**விடை:**
பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல்.

## ஏ. வேறுபாடறிக

**Question 1.**
மலை – பீடபூமி மலை.

**விடை:**

| மலை | பீடபூமி |
|---|---|
| 1. சுற்றுப்புற நிலப்பகுதியை விட 600 மீ.க்கு மேல் உயர்ந்து காணப்படும் நிலத்தோற்றம் மலைகள் எனப்படும். | சமமான மேற்பரப்பைக் கொண்ட உயர்த்தப்பட்ட நிலப்பரப்பு பீடபூமி ஆகும். |
| 2, இவை தனித்தோ அல்லது தொடர்களாகவோ காணப்படுகின்றன. | நூறு மீட்டரிலிருந்து பல்லாயிரம் மீட்டர் வரை உயர்ந்து காணப்படுகின்றன. |
| 3. மலைத் தொடரின் உயரமான பகுதி சிகரம் எனப்படுகிறது. | பீடபூமி சமமான மேற்பரப்பைக் கொண்டுள்ளதால் 'மேசை நிலம்' என்றும் அழைக்கப்படுகிறது. |
| 4. உலகின் நீளமான மலைத்தொடர் தென் அமெரிக்காவில் உள்ள ஆண்டிஸ் மலைத்தொடர் ஆகும். | உலகிலேயே உயர்ந்த பீடபூமி திபெத் பீடபூமியாகும். |

**Question 2.**
பெருங்கடல் – கடல்

**விடை:**

| பெருங்கடல் | கடல் |
|---|---|
| 1. பெரும் நீர்ப்பரப்பு, பெருங்கடல்கள் என்று அழைக்கப்படுகின்றன.<br>(எ-கா): பசிபிக்பெருங்கடல் | பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ நிலத்தால் சூழப்பட்ட பெரிய நீர்ப்பரப்பு கடல் எனப்படும்.<br>(எ-கா): அரபிக்கடல் |
| 2. பெருங்கடல்கள் மிக ஆழமானவை | கடல்கள் பெருங்கடல்கள் போன்று மிக ஆழமானவை அல்ல. |
| 3. பெருங்கடல்கள் சூழலை பாதிக்கின்றன. | கடல்கள் சூழலை பாதிப்பதில்லை. |

## ஐ. விரிவான விடையளி

**Question 1.**
நிலத்தோற்றத்தின் வகைகளை விளக்கி எழுதுக

**விடை:**
பல்வேறு வகையான நிலத்தோற்றங்கள் காணப்படுகின்றன. இந்நிலத் தோற்றங்களை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம். > முதல் நிலை நிலத்தோற்றங்கள்

- இரண்டாம் நிலை நிலத்தோற்றங்கள்
- மூன்றாம் நிலை நிலத்தோற்றங்கள் முதல் நிலை நிலத்தோற்றங்கள்
- கண்டங்கள் மற்றும் பெருங்கடல்கள்

**முதல் நிலை நிலத்தோற்றங்கள் ஆகும்.**

- மிகப்பெரும் நிலப்பரப்பு கண்டங்கள் எனவும், பரந்த நீர்ப்பரப்பு பெருங்கடல்கள் எனவும் அழைக்கப்படும். உலகில் ஏழு கண்டங்கள் உள்ளன. அவை ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அண்டார்டிகா,ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா.
- ஐந்து பெருங்கடல்கள் காணப்படுகின்றன. அவை பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், தென்பெருங்கடல் மற்றும் ஆர்க்டிக் பெருங்கடல்

**இரண்டாம் நிலை நிலத்தோற்றங்கள்**

- மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகள் இரண்டாம் நிலை நிலத்தோற்றங்கள் ஆகும்.
- சுற்றுப்புற நிலப்பகுதியை விட 600 மீ.க்கு மேல் உயர்ந்து காணப்படும் நிலத்தோற்றம் மலைகள் ஆகும்.
- சமமான மேற்பரப்பைக் கொண்ட உயர்த்தப்பட்ட நிலப்பரப்பு பீட பூமி ஆகும். இவை மலைகளைப் போன்று சரிவுகளைக் கொண்டது.
  எடுத்துக்காட்டு: திபெத் பீடபூமி, சோட்டா நாகபுரி பீடபூமி
- சமவெளி சமமான மற்றும் தாழ்நிலத் தோற்றமாகும். இது 200மீ.க்கும் குறைவான உயரம் கொண்ட நிலத்தோற்றம்.
- எடுத்துக்காட்டு: கங்கைச் சமவெளி

**மூன்றாம் நிலை நிலத்தோற்றங்கள்**

- ஆறுகள், பனியாறுகள், காற்று, கடல் அலைகள் போன்றவற்றின் அரித்தல் மற்றும் படியவைத்தல் செயல்களால் மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகளில் தோற்றுவிக்கப்படும் நிலத்தோற்றங்கள் மூன்றாம் நிலை நிலத்தோற்றங்கள் ஆகும்.
- எடுத்துக்காட்டு: கடற்கரை, மணல் குன்று.

**Question 2.**
பீடபூமி பற்றிக் குறிப்பு வரைக

**விடை:**

- சமமான மேற்பரப்பைக் கொண்ட உயர்த்தப்பட்ட நிலப்பரப்பு பீடபூமி ஆகும்.
- இவை மலைகளைப் போன்று வன்சரிவுகள் கொண்டவை.
- பீடபூமிகள் நூறு மீட்டரிலிருந்து பல்லாயிரம் மீட்டர் வரை உயர்ந்து காணப்படுகின்றன.
- உலகிலேயே உயர்ந்த பீடபூமி திபெத் பீடபூமியாகும்.
- பீடபூமிகளில் கனிமங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இந்தியாவில் சோட்டா நாகபுரி பீடபூமி கனிமங்கள் நிறைந்த பகுதியாகும்.
  தென்னிந்தியாவிலுள்ள தக்காண பீடபூமி எரிமலைப் பாறைகளால் ஆனது.

**Question 3.**
சமவெளி மக்கள் நெருக்கம் மிகுந்ததாகக் காணப்படுகிறது. காரணம் கூறு.

**விடை:**

- சமவெளி சமமான மற்றும் தாழ்நிலத் தோற்றமாகும்.
- சமவெளிகள் ஆறுகள், துணை ஆறுகள் மற்றும் அதன் கிளை ஆறுகளால் உருவாக்கப் படுகின்றன.
- இங்கு வளமான மண்ணும், நீர்ப்பாசனமும் காணப்படுகிறது.
- இதனால் வேளாண்மை தழைத்தோங்குகிறது.

- எனவே மக்கள் வாழ்வதற்கு சமவெளி ஏற்றதாய் அமைகிறது. இதனால் உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட பிரதேசங்களாக சமவெளிகள் விளங்குகின்றன.

**Question 4.**
பசிபிக் பெருங்கடலின் சிறப்பம்சங்களை விளக்குக.

**விடை:**

- புவியின் மிகப்பெரிய மற்றும் ஆழமான பெருங்கடல் பசிபிக் பெருங்கடல் ஆகும்.
- புவியின் மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியைக் கொண்டுள்ளது.
- பசிபிக் பெருங்கடலின் மேற்கில் ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவும் கிழக்கில் வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவும் எல்லைகளாக உள்ளன.
- இப்பெருங்கடல் முக்கோண வடிவத்தில் காணப்படுகிறது.
- முக்கோண வடிவத்தின் மேற்பகுதி பெரிங் நீர்ச்சந்தியில் காணப்படுகிறது.
- புவியின் ஆழமான பகுதியான மரியானா அகழி பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ளது.
- பசிபிக் பெருங்கடலைச் சுற்றி எரிமலைகள் தொடர்ச்சியாக அமைந்துள்ளதால் பசிபிக் “நெருப்பு வளையம்” என அழைக்கப்படுகிறது.

**Question 5.**
பெருங்கடல்களின் முக்கியத்துவத்தை விளக்குக.

**விடை:**

- பெருங்கடல்கள் முதல் நிலை நிலத்தோற்றமாகும்.
- புவியில் மேற்பரப்பில் 71 சதவீதம் நீரால் சூழப்பட்டுள்ளது.
- பெருங்கடல்கள் மனித வாழ்வில் கால நிலையிலிருந்து அவன் உண்ணும் உணவு வரை தீர்மானிக்கின்றன.
- பேராழிகள் வளமான புரதச் சத்து மிகுந்த மீன் உணவினைக் கொண்டுள்ளது.
- பேராழிகள் உப்பு, மதிப்பு மிக்க உலோகங்கள், பெட்ரோலியம், முத்து, வைரம் போன்ற உலோகங்களைக் கொண்டுள்ளன.

- கடல் நீரோட்டங்கள் அண்மைப் பகுதிகளின் காலநிலையைப் பாதிக்கின்றன.
- கடல் வணிகம் உலகப் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- கடல் நீரோட்டங்களை மின்னாற்றலாக மாற்ற இயலும்

**ஒ. கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பார்த்து விடையளி :**

**Question 1.**
இந்த நிலத்தோற்றத்தின் பெயரைக் கூறுக.

**விடை:**
மணல் குன்று



**Question 2.**
இது எவ்வகை நிலத்தோற்றம்?

**விடை:**
மூன்றாம் நிலத்தோற்றம்

**Question 3.**
இந்த நிலத்தோற்றம் ஆற்றின் எவ்வகைச் செயலால் தோற்றுவிக்கப்படுகிறது?

**விடை:**
படிய வைத்தல்

**ஓ. i) செயல்பாடு (மாணவர்களுக்கானது)**

அ) அருகில் உள்ள குறிப்பிடத்தக்க ஏதேனும் ஒரு நிலத்தோற்றத்திற்குக் களப் பயணம் மேற்கொள்க.

ஆ) நிலத்தோற்றம் மற்றும் பெருங்கடல்கள் பற்றி வினாடி வினா நடத்துதல்.

### ஓ. ii. செயல்பாடு

**Question 1.**
நிலவரைபடப் புத்தகத்தைப் பயன்படுத்தி கோடிட்ட இடங்களை நிரப்பவும்

**விடை:**
அ) விரிகுடா – வங்காள விரிகுடா, ஹட்சன் விரிகுடா, ஜமைக்கா விரிகுடா
ஆ) வளைகுடா – பாரசீக வளைகுடா, மெக்ஸிகோ வளைகுடா, மன்னார் வளைகுடா
இ) தீவு – ஸ்ரீலங்கா, ஆஸ்திரேலியா, லட்சத்தீவு.
ஈ) நீர்ச்சந்தி – பாக் நீர்ச்சந்தி, பேரிங் நீர்ச்சந்தி, ஜிப்ரால்டர் நீர்ச்சந்தி

**Question 2.**
கீழ்க்கண்டவற்றை நிலவரைப்பட புத்தக உதவியுடன் கண்டுபிடிக்கவும்
அ) இந்தியாவின் கிழக்கில் உள்ள கடல்

**விடை:**
வங்காள விரிகுடா

ஆ) அட்லாண்டிக் பெருங்கடலின் மேற்கில் உள்ள கண்டங்கள்

**விடை:**
வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா

இ) ஆர்க்டிக் பெருங்கடலின் தெற்கில் உள்ள கண்டங்கள்

**விடை:**
ஐரோப்பா, ஆசியா, வட அமெரிக்கா

ஈ) இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே உள்ள நீர்ச்சந்தி

**விடை:**
பாக் நீர்ச்சந்தி

உ) ஆஸ்திரேலியாவைச் சூழ்ந்துள்ள பெருங்கடல்கள்

**விடை:**
இந்தியப்பெருங்கடல், பசிபிக்பெருங்கடல்

ஊ) நிலச்சந்திகளை கண்டுபிடிக்கவும்

**விடை:**
பனாமா நிலச்சந்தி, அவலான் நிலச்சந்தி, லாடியூன் நிலச்சந்தி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**Question 1.**
சர்வதேச மலைகள் தினம்
அ) ஜுன் 15
ஆ) ஏப்ரல் 11
இ) நவம்பர் 11
ஈ) டிசம்பர் 11

**விடை:**
ஈ) டிசம்பர் 11

**Question 2.**
எவரெஸ்ட்சிகரம் இங்கு அமைந்துள்ளது
அ) இந்தியா
ஆ) நேபாளம்
இ) பூடான்
ஈ) பாகிஸ்தான்

**விடை:**
ஆ) நேபாளம்

**Question 3.**
உலகிலேயே உயரமான பீடபூமி
அ) லடாக் பீடபூமி
ஆ) திபெத் பீடபூமி
இ) தக்காண பீடபூமி
ஈ) சோட்டா நாகபுரி பீடபூமி

**விடை:**
ஆ) திபெத் பீடபூமி

**Question 4.**
பின்வருவனவற்றுள் எது இரண்டாம் நிலை நிலத்தோற்றம் அல்ல
அ) சமவெளிகள்
ஆ) பீடபூமிகள்
இ) பள்ளத்தாக்குகள்
ஈ) மலைகள்

**விடை:**
இ)பள்ளத்தாக்குகள்

**Question 5.**
பசிபிக் பெருங்கடலையும் ஆர்டிக் பெருங்கடலையும் இணைப்பது
அ) பேரிங் நீர்ச்சந்தி
ஆ) மெகல்லன் நீர்ச்சந்தி
இ) ஜிப்ரால்டர் நீர்ச்சந்தி
ஈ) பாக் நீர்ச்சந்தி

**விடை:**
அ) பேரிங் நீர்ச்சந்தி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

**Question 1.**
பாஞ்சியாவைச் சுற்றியுள்ள நீர்ப்பரப்பு ____.

**விடை:**
பான்தலாசர்

**Question 2.**
கண்டங்களில் மிகச்சிறியது _____

**விடை:**
ஆஸ்திரேலியா

**Question 3.**
பெருங்கடல்களில் மிகச்சிறியது _____

**விடை:**
ஆர்டிக் பெருங்கடல்

**Question 4.**
உலகத்தின் கூரை எனப்படுவது _____

**விடை:**
திபெத் பீடபூமி

**Question 5.**
இந்தியப் பெருங்கடலின் ஆழமான பகுதி _____

**விடை:**
ஜாவா அகழி

**Question 6.**
உலகின் மிக உயரமான சிகரம் ____

**விடை:**
எவரெஸ்ட்

**III. சுருக்கமான விடை தருக:**

**Question 1.**
நிலச்சந்தி என்றால் என்ன?

**விடை:**
இரண்டு பெரிய நிலப்பரப்புகளை இணைக்கக்கூடியதும் இரண்டு பெரிய நீர்ப்பரப்புகளை பிரிக்கக் கூடியதுமான மிகக் குறுகிய நிலப்பகுதி நீர்ச்சந்தி ஆகும்.

**Question 2.**
தமிழ் நாட்டிலுள்ள கோடைவாழிடங்கள் சிலவற்றைக் கூறு?

**விடை:**

1. உதகமண்ட லம்
2. கொடைக்கானல்
3. கொல்லி மலை

4. ஏற்காடு
5. ஏலகிரி

**Question 3.**
மலைகளின் முக்கியத்துவத்தை வெளிக்கொணர்

**விடை:**

- மலைகள் ஆறுகள் உற்பத்தியாகும் இடமாகத் திகழ்கின்றன.
- நீராவி நிரம்பிய காற்றினைத்தடுத்து மழைப் பொழிவைத் தருகின்றன.
- தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் இருப்பிடமாகத் திகழ்கின்றன.
- மலைகளில் சுற்றுலாத்தலங்களும், கோடை வாழிடங்களும் அமைந்துள்ளன.

**Question 4.**
மூன்றாம் நிலை நிலத்தோற்றங்கள் பற்றி சிறு குறிப்பு வரைக.

**விடை:**

- ஆறுகள், பனியாறுகள், காற்று மற்றும் கடல் அலைகள் போன்றவற்றின் முக்கியச் செயல் அரித்தல் மற்றும் படியவைத்தல் ஆகும்.
- இச்செயல்களால் மலைகள், பீடபூமி மற்றும் சமவெளிகளில் தோற்றுவிக்கப்படும் நிலத்தோற்றங்கள் மூன்றாம் நிலைத்தோற்றங்கள் ஆகும்.

**Question 5.**
இந்தியப் பெருங்கடல் பற்றி சில வரிகள் எழுதுக.

**விடை:**

- புவியின் மூன்றாவது பெரிய பெருங்கடல் இந்தியப் பெருங்கடல் ஆகும்.
- இந்தியாவுக்கு அருகாமையில் இருப்பதால் இக்கடல் இப்பெயரைப் பெற்றுள்ளது.
- இது முக்கோண வடிவமானது.

- இப்பெருங்கடலில் அந்தமான் நிக்கோபார், லட்சத் தீவுகள், மாலத் தீவுகள், இலங்கை மொரிஷியஸ் போன்ற பல தீவுகள் உள்ளன.
- இப்பெருங்கடலின் ஆழமான பகுதி ஜாவா அகழியாகும்.

## மனவரைபடம்

